# சைவசித்தாந்த நோக்கில் சைவமும் சைவப்பிரிவுகளும்: ஓர் ஒப்பீட்டாய்வு

*Saivism and the Various Saivite Sects: A Comparative Study from the Saiva Siddhanta Perspective*

*Dr. P.Sachithananantham*[1]

sachithananthamp@esn.ac.lk

***Abstract***

*The development of various sects within religions origin to ideological differences is a well-established phenomenon in the study of religion. Such doctrinal disagreements and differences have also existed within Saivism. Among the six major sects of Hinduism, Saivism occupies one of the prominent position. Inside itself, Saivism comprises several sub divisions. Saiva Siddhanta is regarded as its highest philosophical culmination. The doctrines of Saiva Siddhanta are based on the philosophy of the three fundamental realities Pati, Pasu, and Pasa, the liberation of the soul, and the paths leading to liberation. Other Saiva sects also are carrying the same ideology as Siva Siddhanta but there are differences among. This study aims to examine the development of Saivism in the way of Siva Siddhanta and It further investigate the influence of Saiva Siddhanta on sect of Saivism. Differences between Saiva sects and Saiva Siddhanta occurs throughout its historical evolution. The research has been carried out through a detailed textual and analytical study of literary works related to Saivism, its various sects, and Saiva Siddhanta.Scholarly research on Saivism, its sects, and Saiva Siddhanta is becoming increasingly important for the Hindu Philosophical studies. This study seeks to contribute meaningfully to contemporary academic discourse. It is expected to serve as a valuable resource for university students, researchers, and scholars engaged in the study of Saivism, Saiva sects, and Saiva Siddhanta, while also encouraging further research in this field.*

*Keywords: Saivism, Saiva Siddhanta, InternalSects (Agachchamayam), External Sects (Purachchamayam), Internal–External Sects (Agappurachchamayam).*

[1] Senior Lecture Gr.1, Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture, Eastern University Sri Lanka

**ஆய்வு அறிமுகம்:**

*சைவம் சிவசம்பந்தம் உடையது. சிவனை முழுமுதற்கடவுளாக வழிபட்டவர்கள் சைவர்கள். இவர்களுக்கிடையே பல பிரிவுகள் கருத்து நிலை வேறுபாட்டால் ஏற்பட்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இதனாலே சைவ சமய ஆராய்ச்சியாளர்கள் தொன்று தொட்டுச் சைவம், சைவப்பிரிவுகள் பற்றி பேசி வந்துள்ளனர். குறிப்பாக சைவப்பிரிவுகள் பற்றி பேசுவதற்கான ஆதாரங்களை ஆகமங்களிலும், புராணங்களிலும் கண்டுகொள்ளலாம் எனவும் எடுத்துக்காட்டுவர். எடுத்துக்காட்டாக வாமன புராணம் சைவர், பாசுபதர், காளாமுகர், காபாலர் என்ற நால்வகைப் பிரிவினரைப்பற்றி குறிப்பிட்டுள்ளதும், சைவபுராணம் சைவபாசுபதர், சைவமகாவிரததாரிகள், காபாலிகர் என்ற பிரிவினரை எடுத்துக்காட்டுவதும், லிங்கபுராணம், ஸ்கந்தபுராணம், வாயுபுராணம், என்பனவற்றிலும் சைவப்பிரிவுகள் பற்றி பேசப்பட்டுள்ளதும், ஆகமங்களுள் சுவாயம்புவம், சுப்பிரபேதம் ஆகியன சைவம்,பாசுபதம், சோமம், லகுலீசம் என்ற நான்குவகைப் பிரிவுகளை எடுத்துக்காட்டுகின்றன என்பதனை கந்தையா எடுத்துக்காட்டுகின்றார் (கந்தையா, மு, 1998: 122). என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் கூர்ம புராணம் சைவப்பிரிவுகளை காபால நகுல அல்லது லகுல பாசுபத, வாம, வைரவ, பாஞ்சராத்திரர் எனவும், சோம, லாகூர அல்லது லஞ்சன அல்லது வாகுல பாசுபதம், வாம வைரவ எனவும் எடுத்துக்காட்டியுள்ளது.*

*சைவத்தின் முடிந்த முடிவான சைவசித்தாந்தம் எனும் சொல்லாட்சியை முதல்முதலில் எடுத்தாண்ட திருமூலர் சைவத்தை சுத்தசைவம், அசுத்தசைவம், கடும்சுத்தசைவம், மார்க்கசைவம் என வகைப்படுத்திக் காட்டுகின்றார்* (Narayana Ayyar, A.C.,*1974: 248). ஆனால் சைவசித்தாந்தமோ புறச்சமயம், அகச்சமயம், அகப்புறச்சமயம், புறப்புறச்சமயம், என சிவஞானசித்தியார் வாயிலாக எடுத்துக்காட்டும்;. இவர்களுக்கிடையே பல சிறு வேறுபாடுகள் நிலவுவதனையும் எடுத்துக்காட்டுகின்றார். உதாரணமாக சுத்தசைவர் குண்டலம், நீறு, உருத்திராட்சம் அணிபவர்களாகவும், சரியை, கிரியை எனும் மார்க்கங்களைப் பின்பற்றுபவர்களாகவும் விளங்குகின்றனர். கடும்சுத்தசைவர் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களுக்கும் மேலாக தமது வெளித் தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காது சாயுச்சிய நிலையை அடைபவர்கள். சுத்தசைவர்கள் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களுக்கும் இடையேயான வேறுபாட்டை உணர்ந்தவர்கள். சுத்தமாயையை அசுத்த மாயையுடன் கலப்பதை அனுமதிக்க மாட்டார்கள். மார்க்கசைவர் குண்டலமும், நீறும் அணிபவர்கள், ஞானத்தில் அதிகம் கவனம் செலுத்துபவர்கள்.*

*சைவசமயத்தில் சிவதீட்சை பெற்றவர்களை வைத்து மகாசைவர், ஆதிசைவர், அனுசைவர், அவாந்த சைவர், எனப்பல பிரிவுகளாக பிரித்து நோக்கியுள்ளார் சிவாக்கிரயோகிகள் (அருணை வடிவேலு முதலியார் சி., 1991: 100). சைவ சமயம் இந்தியாவின் வடநாட்டிலும் தென்னாட்டிலும் மாக பல பகுதிகளிலும் பல்வேறு பெயர்களுடன் பரவத்தொடங்கியது. இதனையே மாணிக்கவாசர் தென்னாடுடைய சிவனே போற்றி எனப்பாடியுள்ளார். இதனால் தென்னாட்டில் சைவம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடப்பட்ட மதமாக கொள்ளப்படுகின்றது.*

***ஆய்வுப்பிரச்சினை***

*இவ்வாய்வானது இந்துசமயத்தின் ஒரு பிரிவான சைவ சமயத்திற்குள் பல சைவப்பிரிவுகள் ஏன் காணப்படுகின்றது என்பது ஒரு தத்தவார்த்தமான தேடலுக்கான கேள்வியை எழுப்புவதோடு அவற்றிற்கிடையேயான வேறுபாடுகள், மற்றும் ஒருமைப்பாடுகளை ஆய்ந்தறிவது இன்றியமையாத தேவையாகவும் உள்ளது.*

***1. பிராந்திய ரீதியான சைவப்பிரிவுகள்***

*இந்தியாவில் சைவம் பல பிரிவுகளாக வளர்ச்சியடைந்தது. அந்தவகையில் வடநாட்டில் காஷ்மீரசைவம் அல்லது பிரத்யபிஞ்ஞாதரிசனமாகவும், தென்னாட்டில் தமிழகத்திலும் இலங்கையிலும் சைவசித்தாந்தமாகவும், குஜராத்தியில் பாசுபதசைவமாகவும், கன்னடம் போன்ற இடங்களில் வீரசைவமாகவும் சைவம் வளர்ச்சி கண்டது (ஞானகுமாரன்., நா., 1994: 10) இவற்றுள் பல அகப்புறச்சமயங்கள் வழக்கொழிந்து போனவையாக காணப்பட சைவசித்தாந்தம், காஷ்மீரசைவம், வீரசைவம் போன்றன நிலைபேறாக இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகின்றது எனலாம். நந்திகேஸ்வரசைவம், இராஜேஸ்வரசைவம், விசிஷ்டாத்துவித சைவம், போன்ற சைவப்பிரிவுகளும் உள. மேலும் தத்துவலிங்க தேவர் பதினாறு வகையான பேதசைவப்பிரிவை முன்வைப்பதும் நோக்கத்தக்கது. இவ்வாறாக அமைந்த சைவசமயத்தின் பிரிவுகளுக்கும் சைவசித்தாந்தத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக எடுத்துக்காட்டுவார் நல்லசுவாமிப்பிள்ளை( Michael Bergunda.,2010:39 )*

***1.1 காஷ்மீரசைவம்***

*சைவத்தின் ஒரு பிரிவாகக் கொள்ளப்படுகின்ற காஷ்மீரசைவம். எட்டாம் நூற்றாண்டிற்கும் பன்னிரெண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதில் காஷ்மீரத்தில் தோற்றம் பெற்ற சைவ மெய்யியல் மரபு சுருக்கமாக காஷ்மீரசைவம் என அழைக்கப்படுகின்றது என து* J.C Chatterji *குறிப்பிடுகின்றார் ; (Chatterji J.C.,1914:2). காலத்திற்கு முந்திய காளாமுகம், காபாலிகம், பாசுபதம் ஆகிய சமயங்களின் கருத்தியல்களில் இருந்து முற்றிலும் வேறுபட்ட விதத்தில் தோற்றம் பெற்ற ஒரு புதிய சமயமாகும். காஷ்மீரத்தில் அர்த்தநாரீசுவரனான சிவனின் வழிபாடு மக்களிடையே மிகவும் பிரபல்யமானது எனத் தகாரே குறிப்பிடுகின்றார் (தகாரே .க.வா.,2001:119). காஷ்மீரசைவம் கி.பி 8 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சைவமெய்யியலாக நிறுவப்படுகின்றது (Chatterji .J.C., 1914:3). இவ்வாறாக காஷ்மீர சைவத்தின் தோற்றம் எடுத்துக்காட்டப்படுகின்றது. காஷ்மீரசைவம் இருபிரிவுகளைக் கொண்டது. ஒன்று ஸ்பந்தசாஸ்த்திரம் மற்றையது பிரத்தியபிஞ்ஞானசாஸ்த்திரம் என்பனவாகும் (Bandarkar R.G., 1965:129) இவற்றிற்கு அடிப்படையாக அமைவது சிவசூத்திரமும், ஸ்பந்தகாரிகையுமாகும். வசுகுப்தராலும் அவரது சீடரான கலாத்தராலும்(கல்லாடர்) உருவாக்கப்பட்ட காஷ்மீரசைவச் சிந்தனையானது சிவபெருமானால் நேரடியாக சித்தர் வடிவம் தாங்கி வந்து வசுகுப்தருக்கு மகாதேவமலையில் அருளப்பட்ட போதனை இது எனப்படுகின்றது. பிரத்தியபிஞ்ஞானப் பிரிவை உருவாக்கியவர் சோமநாதர். அவர் எழுதிய சிவதிருஷ்ட்டியானது உலகம் எவ்வாறு படைக்கப்படுகின்றது, ஆன்மாவிற்கும் பரமான்மாவிற்கும் இடையேயான தொடர்பு என்பன பற்றிப் போதிக்கின்றது (Bandarkar R.G., இ 1965:131). அதேவேளை க.வா தகாரே காஷ்மீரசைவத்தை*

*மூன்று பிரிவுகளாக எடுத்தாள்கின்றார் (தகாரே,க.வா., 2001:130).* R. G. Bandarkar *ஸ்பந்த சாஸ்த்திரத்திற்குள் கூறிய இறைவனால் அருளப்பட்ட சிவசூத்திரத்தை ஆகமசாஸ்த்திரப் பிரிவாகத் தனித்து எடுத்தாண்டுள்ளார். தகாரே ஆகம சாஸ்த்திரம், ஸ்பந்த சாஸ்த்திரம், பிரத்திய பிஞ்ஞான சாஸ்த்திரம் ஆகிய மூன்று பிரிவுகளாக விரித்துரைத்துள்ளார். மேலும் காஷ்மீரத்தில் நிலவும் சைவத்தை கோட்பாட்;டு அடிப்படையில் இரு பிரிவுளாகச்; சுட்டுவர் அவை அத்வைத பரமான திரிகம், மற்றையது துவைத பரமான சித்தாந்த சைவம். திரிக தத்துவம் எனவும் அழைக்கப்படும். இதனுடைய அடிப்படை இங்கு திரிகம் எ;ன்பது பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருட்களைக் குறிக்கின்றது. அவை அனாதியானவை (செல்வமனோகரன் தி.,2020:17) பரமசிவனே முடிந்த முடிவான உண்மைப்பொருள். காஸ்மீரசைவம் கூறும் முப்பொருள்களுள் கடவுள் முதன்மையானவர். அவர் சுயாதீனமானவர் (independant) பிரபஞ்சத்தில் உள்ள உயிருள்ள பொருட்கள் அனைத்தும் அவரது சிந்தனையில் இருந்தே படைக்கப்படுகின்றன.*

*சைவசித்தாந்தம் சொரூபநிலைச் சிவனை எடுத்துக்காட்டுவது போல கஷ்மீரசைவமும் சிவத்தின் மேலான தன்மையை ஸ்வந்திரிய எனும் சொல்லால் சுட்டுகின்றது. சோமநாதரால் எழுதப்பட்ட திரிகசாஸ்திரம் பரமசிவனே முடிந்தமுடிவான தத்துவம், அவன் சித் அல்லது சிதி எனப்பட்டான். அவன் காலம், பெயர் இடம் கடந்தவனாகவும், உலகவடிவானவனாகவும், உலகத்தை கடந்து வியாபித்தும் உள்ளான் என தகாரே எடுத்துக் காட்டுகின்றார் (தகாரே, க. வா., 2001: 187) காஷ்மீரசைவம் கூறும் கடவுள் சைவசித்தாந்தக் கடவுளுக்கு ஒப்பானவர் என்பதனைத் தெளிவுபடுத்துகின்றது. காஷ்மீரசைவத்தின் தத்துவார்த்த நோக்கு அத்வைத சைவ சிந்தனையாகவும், ஆகம மற்றும் ஸ்பந்த காரிகை எனும் நூல்களை அடிப்படையாகவும் கொண்டமைவதோடு மறுவகையில் பிரத்தியபிஞ்ஞான தத்துவத்தையும் கொண்டு அமைகின்றது. (*Chatterji, J.C.,*1986:5). சைவசித்தாந்தத்தைப் போலவே காஷ்மீரசைவமும் சிவனின் ஐந்தொழில்களை எடுத்துக் கூறுகின்றது. முப்பொருட்களான பதி, பசு, பாசம் ஆகியனவற்றை ஏற்கின்றது. ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை ஏற்கின்றது. சிவன் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி ஆகிய சக்திகளைப் பயன்படுத்துகின்றார். முப்பத்தாறு தத்துவங்களையும் ஏற்றுக் கொள்கின்றது. குருவின் வழிகாட்டல் தீட்சைக்குத் தேவை என்பதனை வலியுறுத்துகின்றது. விடுதலைக்கான உபாயங்களாக அநுபாயம் (ஆனந்த உபாயம்), சாம்பவ உபாயம், ஞானஉபாயம் (சாக்த உபாயம்), ஆணவஉபாயம் (கிரியோபாயம்) என்பனவற்றை எடுத்துக்காட்டுகின்றது.*

*கஷ்மீரத்தில் அசோக மௌர்யனுக்கு முந்திய காலத்தில் இருந்து அர்த்தநாரீஸ்வரனான சிவனை மக்கள் வழிபட்டு வந்துள்ளார்கள் என்றும் அவ்வழிபாட்டிற்கு கஷ்மீரத்திற்கு வெளியில் இருந்து வந்த ஸோமானந்தர், அபிநயகுப்தர் ஆகியோரின் வம்சத்தினரால் கி.பி 8ஆம் நூற்றாண்டில் ஆகமங்களைச் சார்ந்து தத்துவவிளக்கம் கொடுக்கப்பட்டு தத்துவார்த்த அடிப்படையில் கஷ்மீரசைவம் நிறுவப்பட்டது என்று தகாரே (தகாரே. க.வ 2001) குறிப்பிடுவது கஷ்மீரசைவத்தின் தோற்றத்தை புரிந்துகொள்ள உதவுகின்றது.*

கஸ்மீர் பிரதேசத்தில் 08 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 09 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒருமைவாத சைவச் சிந்தனையாக இது விளங்குகின்றது. திரிகசைவம் அல்லது திரிகசாஸ்த்திரம் என அறியப்படும் இச்சமயப்பிரிவானது. சித்தாந்ததந்திர, மாலினிதந்திர, வாமகாந்திர எனும் திரிக நூல்களை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றிலே கஸ்மீரசைவம் பற்றிய இறையியல், மெய்யியல்சார் கருத்துக்கள் அமைந்துள்ளன. வசுகுப்தரே முதலில் திரிகமெய்யியலை விபரமாக வெளிப்படுத்தியவராவார் அதுவே சிவசூத்திரம் என அழைக்கப்பட்டது. பிற்காலத்தில் சோமானந்த, உட்பலாதேவர், பாஸ்கராச்சாரியர், அபநயகுப்தர், கேசமராஜ் போன்றவர்களால் வியாக்கியானப்படுத்தப்பட்டது. கஸ்மீரசைவம் உள்ளபொருள் மூன்று அதாவது கடவுள், ஆத்மா, சடம், எனக் கொள்கின்றது. அத்வைதக் கோட்பாட்டின் செல்வாக்கிற்குட்பட்ட கஸ்மீரசைவம் சிவனை முழுமுதற் பொருளாகவும், அவரில் இருந்தே ஏனைய அனைத்தும் தோன்றின என்றும் கூறும். இறையியற் பார்வையில் சிவமும் சக்தியும் முழுமுதலாகக் கொள்ளப்பட்டன. அபிநயகுப்தர் திரிக கோட்பாட்டை இறுதியும் அறுதியுமான மெயப் பொருள் இரண்டற்ற ஒன்று அது சக்தியும் சிவமும் இணைந்த வடிவம் என்றார். இறுதியும் அறுதியுமான மெய்ப்பொருள் சித்தத்திற்குப் புலப்படாதது மனம் வாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்டது. அதுவே தனது சக்தியால் பிரபஞ்சமாகத் தோன்றுகின்றது. மாயை அதற்குத் தேவையில்லை பிரபஞ்சமும் மாயை அல்லது அவித்தையல்ல. பிரபஞ்சம் தெய்வீகசக்தியின் விளைவாகவே கொள்ளப்படுகின்றது. புலன்களுக்கு தோன்றும் பிரபஞ்சம் மாயைத் தோற்றமல்ல உண்மையானது. அறுதியும் இறுதியுமான மெய்ப்பொருள் பிரபஞ்சமாகத் தோன்றுகின்றது. அம்மெய்ப் பொருள் எந்தவிதமான மாற்றவிகாரங்களுக்கும் உட்படாது மெய்ப்பொருளில் இருந்து வேறுபடாது உள்ளது. கண்ணாடியில் விம்பம் தோன்றுவது போல பிரபஞ்சம் மெய்ப்பொருளின் பிரதிபலிப்பாக உள்ளது. அத்வைதத்தைப் போலல்லாது காஸ்மீரசைவம் சடத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. உலகில் வாழ்வை ஒருமைவாதச் சிந்தனையில் இருந்தும் வேறுபட்ட விதத்தில் தாந்திர அடிப்படைகளைக் கொண்டு உலகியலைத் துறப்பதைவிட உலகு உண்மையானது என உறுதிபூண்டு இறைவனே அடிமைத்தளைகளை, கட்டுக்களை வாழ்வியலிலே கொடுத்துள்ளான் என நம்பி வாழவேண்டும் எனக்கூறுகின்றது. துறவைவிட வாழ்வியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. விடுதலை என்பது இறைவனை அறிவுபூர்வமாக உணர்தல் அதாவது இறைவனும் தனிமனித ஆத்மாவும் ஒன்று என்பதனை உணர்தல். அதனை வாழ்வியலை அனுபவிப்பதனூடாகவே அடையமுடியும் என்பதே காஸ்மீரசைவத்தின் நிலைப்பாடு. அறிவு அல்லது ஞானம் தான் விடுதலைக்கு அடிப்படை. தாந்திரசைவம் விடுதலைக்கு பல்வேறு பார்வைகளைக் கொண்டு விளக்குகின்றது. அது தனிமனிதனின் திறமை, முயற்சியும் இறைவனின் கருணையும் விடுதலைக்கு இன்றியமையாதது பக்திக்கு ஒரளவு இடம் கொடுத்தாலும் யோகத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்காத சமயமாக இது விளங்குகின்றது. இறைவனின் அனுக்கிரகம் இன்றி தனிமனிதனின் முயற்சி பயனற்றது என்பதே கஸ்மீரசைவத்தின் உறுதியான நம்பிக்கை. ஆத்மா தன்னை முழுமுதற் பொருளோடு (சிவன்) அடையாளப்படுத்திக் கொள்வதற்கு இறைவனின் அனுக்கிரகம் அவசியம் இவ்வனுக்கிரகம் சுதந்திரமானதும் தன்னிச்சையானதும். அதனுடன் தனிமனிதனின் முயற்சியும் ஆன்மவிடுதலையைத் தீவிரப்படுத்தி; ஒழுங்குபடுத்தி முத்திக்கு வழிகாட்டுகின்றன என்பது கஸ்மீரசைவத்தின் அசையாத நம்பிக்கை.

***1.2 வீரசைவம்***

*வீரசைவம் பசவரால் தோற்றுவிக்கப்பட்டது. ஆயினும் இம்மரபு இராஜேஸ்வரரின் சத்தரிசனசாமுச்சியவில் குறிப்பிடப்படுகின்ற பிராணலிங்கம் பற்றிய கருத்தினூடாக முன் மொழியப்பட்டதாக சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இப்பிராணலிங்கம் வீரசைவர்கள் கழுத்திலும் கையிலும் அணிந்து கொள்ளும் முக்கியமான லிங்கமாக பிற்காலத்தில் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேற்படி இராஜேஸ்வரரின் கருத்தியலின் வாயிலாக பசவர்க்கு (கி.பி 12) முன்பே 9ஆம் நூற்றாண்டில் லிங்காயத வழிபாடு இடம்பெற்றிருப்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.*

*பசவரால் கி.பி 12 ஆம் நூற்றாண்டில் கன்னடப்பகுதியில் பரப்பப்பட்டு பிரபல்யம் அடைந்தாலும் அது அவரது காலத்திற்கு முந்தைய சிந்தனை முறை. வசவருக்கு முன்பு ரேவணசித்தர், மருளசித்தர், ஏகோராமர், பண்டிதாரரத்யர், விச்வாராத்தயர், எனும் வீரசைவ ஆசாரியர்கள் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (தகாரே, க. வா., 2001:297). சைவசித்தாந்தத்தைப் போல சிவாகமங்கள், புராண இதிகாசங்கள் என்பனவற்றை ஏற்றுக் கொள்கின்றது. வீரசைவம் லிங்கத்திற்கும் லிங்கவழிபாட்டிற்கும் முதன்மை கொடுப்பதனால் லிங்காயதம் எனவும் அழைக்கப்படுகின்றது.*
*வீரசைவ தத்துவமுறைக்கு சக்தி விசிஷ்டாத்வைதம் என்று மறுபெயர் உண்டு (மகாதேவன் ரி.எம்.பி, 2006:138) இக்கொள்கையின் பிரகாரம் இறைவனில் இருந்து அகலமுடியாத சக்தி காரணமாக இறைவனும் ஆன்மாவும் பிரிக்க இயலாத ஒன்றிப்பில் இருக்கின்றனர். இறைவன் முழுமை: அதன்பகுதிகளாக தனிப்பட்ட ஆன்மாக்கள் உள்ளன. ஆன்மா உடல் என்றால் இறைவன் உயிர் என்பதே இக்கொள்கை. வீரசைவர்களின் இக்கொள்கையானது இராமானுஜரின் விசிஷ்டாத்வைதத்திற்கு ஒப்பானதாகும். எடுத்துக்காட்டாக ஸ்ரீபதிபண்டிதர் தனது வீரசைவக் கொள்கையை அத்வைதமாக அல்லாது விசிஷ்டாத்;வைதமாகவே எடுத்தாண்டுள்ளார்(தகாரே க.வா., 2001: 312).*

*வீரசைவம் இறுதிமெய்ப்பொருள் ஒன்று, அவரே பதி; அவர் சத், சித், ஆனந்த மயமானவர். இவை சிவனது(சிவதத்துவத்தினது) அடிப்படை மூன்று இயல்புகள் என ஸ்தலா* (Sthala) *சுட்டுவர்* (Bandagar, G.R., *1965 :134*). *பரமசிவனே ஸ்தலமாக அதாவது உறைவிடமாக உள்ளான். இறைவனிடம் இப்பிரபஞ்சம் இருக்கின்றது அது மீளவும் அவனிடமே சென்று ஒடுங்குகின்றது. ஸ்தல என்பதனை லிங்கஸ்த்தல, அங்கஸ்தல என இரண்டாகப்பிரித்து லிங்கஸ்;தல என்பதனுள் சிவனையும் அங்கஸ்தலவினுக்குள் ஆன்மாவையும் உள்ளடக்கினர் லிங்காயதர்கள். லிங்காயதர் லிங்கங்களை பாவலிங்கம், பிராணலிங்கம், இஷ்டலிங்கம் என மூன்றாகப்பிரித்து எடுத்தாள்வர். பாவலிங்கம் என்பது உயர்விலும் உயர்வான கண்ணுக்கு புலப்படாத சத் இருப்புநிலையில் உள்ள லிங்கமாகும். பிராணலிங்கம் மனதினால் உணரக்கூடியது. அது சித் வடிவானது. இஷ்டலிங்கமானது கண்ணுக்குப் புலப்படக் கூடியது. அது ஆனந்தத்தின் அடையாளம். ஆக, லிங்காயுதம் சத், சித், ஆனந்த வடிவத்தின் அம்சமாக கொள்ளப்படுகின்றது.*

*வீரசைவர்களின் பிரதான நம்பிக்கை லிங்கத்தை முழுமுதல் கடவுளாக நம்புதல். சிவன் தனது சக்தியை தானே கடவுளாகவும், ஆன்மாவாகவும், மாற்றிக் கொள்கின்றார். கடவுளில் உள்ள*

*பிரகிருதி அல்லது மாயையைக் கொண்டு தானே பிரபஞ்சமாக மாறுகின்றார். இந்தக் கருத்தியலோடு வீரசைவம் இராமானுஜரின் விசிட்டாத்வைதத்தோடு ஒத்துவருகின்றது. சைவசித்தாந்தத்தில் இருந்து வேறுபட்டு நிற்கின்றது. வீரசைவம் கூறும் ஆன்மாவினதும் பிரபஞ்சத்தினதும் பண்புகள் இறைவனின் பண்புகளை ஒத்தவையாக அமைகின்றன. ஆனாலும் வீரசைவம் கடவுளுக்கு மாத்திரமே வலிமை கொண்ட பராசக்தி உண்டு என்றும், அதுவே படைப்புக்கு இட்டுச் செல்கின்றது என்றும் எடுத்துரைக்கும். கடவுளே வல்லமையுள்ளவர் என ஒப்புக் கொள்வதனால் ஏனையவற்றில் இருந்து விசேடித்த ஒருமையாக கடவுள் கொள்ளப்படுவதனால் வீரசைவம் விசிட்டாத்வைதத்தோடு ஒத்ததாக உள்ளது* (Bandagar, G.R., *1965 :137) இங்கு வீரசைவம் சைவத்தின் ஒரு பிரிவாக இருந்தாலும் அது விசிஷ்டாத்வைதத்தோடு ஒத்துச் செல்கின்றது என்பதற்கு அது சான்றாக அமைகின்றது. மேலும் வீரசைவம் ஆன்ம விடுதலைக்கு பக்தி மார்க்கம் சார் ஒழுக்க ஆன்மீக நெறியைப் பின்பற்றி ஆன்மா சிவனுடன் சமரசநிலையை அடைவதனைக் கொண்டும் இச்சயங்களுக்கிடையே ஒருமைப்பாடு உண்டு.*

*வீரசைவம் (Vīra-Saiva ) எனும் பதமான வலிமையான அல்லது பலமான சைவர்கள். லிங்கத்தை தமது கழுத்திலே அணிந்தவர்களைக் குறிக்கின்றது. வீரசைவம் வீ என்ற எழுத்தும்; ர என்ற எழுத்தும் இனணந்து உருவாகிய சொல் அதன்பிரகாரம் வீ என்றால் சிவனுக்கும் ஜீவனுக்கும் ஐக்கியம் உண்டு என்ற ஞானத்தை விளைவிக்கும் வித்தையை: ர என்பது ரமிக்கின்றவர்கள் திளைத்தவர்கள் அதாவது சிவனுக்கும் ஜீவனுக்கும் ஐக்கியமுண்டு என்பதில் திளைத்தவர்கள் வீரசைவர்கள் என சித்தாந்த சிகாமணி தரும் விளக்கத்தை தகாரே வீரசைவம் தொடர்பாக எடுத்துக்காட்டுவது வீரசைவம் பற்றிப் புரிந்து கொள்ள உதவியாக அமையும். அதேவேளை ஆகமங்களை ஆதாரமாகக் கொண்ட வீரசைவ மதத்தில் புகழ்பெற்ற பரமேசுவர தந்திரத்தில்" எந்தக் கடுமையான நிலையிலும் உறுதியுடன் சைவ அறத்தைக் காப்பவன் வீரசைவன் ஆவான்"( மேலது) எனக் குறிப்பிடப்படுவதும் வீரசைவர்கள் பரமாத்மாவில் உறுதியான நம்பிக்கை கொண்ட பக்தர்களையே சுட்டுகின்றது.*

*வீரசைவர் அல்லது லிங்காயதர் 12 ஆம் நூற்றாண்டில் வடமேல் கர்நாடக மானிலத்தில் தோற்றம் பெற்ற சைவ சமயப்பிரிவாகும். வீரசைவப் பண்பாடு இருபத்தெட்டு ஆகமங்களில் நம்பிக்கை வைத்தலை அடிப்படையாகக் கொண்டது. வீரசைவர்கள் தங்களுக்கு ரேவணசித்தர், மருளசித்தர், ஏகோரமர், பண்டிதாரத்யர், விஸ்வராத்வர், ஆகிய ஐந்து பேரையும் தமது குருவாகக் கொள்வர். இவர்கள் ஐவரும் சிவனின் ஐந்து முகங்களில் இருந்து தோன்றினார்கள் எனவும் நம்பினர். வசபதேவர் அல்லது வசவேஸ்வரர் தான் வீரசைவத்தை தோற்றுவித்தவராக கொள்ளப்படுகின்றார். வசவதேவர் மரபுரீதியான சடங்குகளிலும் பூநூல் சடங்கிற்கும் எதிராக இச்சமயப்பிரிவைத் தோற்றுவித்தார். ஆகமங்கள் குறிப்பாக காமிகம், வீராகமம், பரமேசுராகமம் போன்றவற்றில் வீரசைவம் பற்றியும் அதன் ஒழுங்கு முறை பற்றிய குறிப்பபுக்களும் இடம்பெற்றுள்ளதனால் ரேவணசித்தருக்கு முன்பு வீரசைவம் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்தும் மனம் கொள்ளத்தக்கது.*

*அவரைப் பின்பற்றுபவர்கள் நந்தியின் அவதாரமாகவே அவரைக் கருதினர். சிவனை மட்டும் வழிபடுகின்றவர்களாக விளங்குகின்றனர். சிவன் ஒவ்வொருவரிலும் இருந்து இறைவனின் தெய்வீக வெளிப்படுத்தலை தரிசிப்பதற்கு ஊட்டமளிக்கின்றான். லிங்கத்தை நெருப்பின் வடிவமாகவும் அக்கினி தூய்மையின் அடையாளமுமாக வீரசைவர்களால் கொள்ளப்பட்டது.*

*வீரசைவத்தை ஒரு மதமாகப் பரப்பிய பெருமைக்குரியவர் பசவர் என்றும் அதனை ஒரு தத்துவஞான முறையாக நிலை நிறுத்துவதற்கு பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீகரபாஷ்யம் என்ற உரையை எழுதிய ஸ்ரீபதி பண்டிதர் வீரசைத்திற்கான தத்துவஞான விளக்கத்தை அளித்தார் எனலாம். இவர் வாழ்ந்த காலம் கி.பி 11 ஆம் நூற்றாண்டு ஆகும். இவர் தான் நிறுவிய மதத்தை விசேஷாத்வைதம், த்வைதாத்வைதம், ஸேச்வராத்வைதம், சிவாத்வைதம், ஸர்;வச்ருதிஸாரமதம், பேதாபேதம், என்று பல பெயர்களால் குறிப்பிட்டுள்ளார்.*

***1.3 சைவசித்தாந்தம்***

*சைவம் +சித்தம் +அந்தம் ஸ்ரீ சைவசித்தாந்தம். சைவத்தின் அறிவு ரீதியிலான முடிவு அல்லது அந்தம் சைவசித்தாந்தம். சைவத்தின் முடிந்த முடிவு எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. சைவம் மிக நீண்ட ஒரு வளர்ச்சிப் பாரம்பரியத்தைக் கொண்ட சமயமாகும். அதனுடைய அந்தமாகவே சைவ சித்தாந்தம் மிளிர்கின்றது. வேதசிவாகமங்கள் பிரமாணங்களாக கொள்ளப்படினும். சைவ சித்தாந்தத்திற்கு சைவாகமங்கள் சிறப்பு நூலாகக் கொள்ளப்படுகின்றன. வேதத்தின் அந்தம் வேதாந்தம் என்பது போல ஆகமத்தின் அந்தம் ஆகமாந்தம் அதுவே சைவசித்தாந்தம். இதனைச் சிவஞானசித்தியார் "சிவாமங்கள் சித்தாந்தமாகும்"(சிவஞானசித்தியார் சுபக்கம், சூ: 8) எனவும் எடுத்துக்காட்டும்.*

*பழந்தமிழ் நூல்களில் சைவத்தின் புராதன நாமம் சன்மார்க்க நெறி என்பதே எனவும் சித்தர் காட்டும் சமய நெறியாகவும், வடஇந்தியாவிலே வேதநூல் போற்றும் சனாதன தர்மமாகவும், பிற்காலத்தில் வேதங்களையும், சைவ ஆகமங்களையும் ஏற்று சைவ சித்தாந்தமாகவும் வளர்ச்சியடைந்தது என்பது அறிஞர்களின் கருத்து. மேலும் ஆறுமுகநாவலர் பெருமான் சைவ சித்தாந்தத்தின் சிறப்பை எடுத்துக் கூறும் போது சைவ சித்தாந்;தத்தைத் தவிர பரமுக்தி சித்தியாது என்றும் பரமுத்திக்கு சாதனம் சிவஞானமே என்பதும் அச்சிவஞானத்திற்கு சரியை முதல் மூன்றும் முக்கியமான பாதைகள் எனவும் சிவப்பேறடைய சைவ சித்தாந்த வழியே சிறந்தது என்பார் இது சைவ சித்தாந்தத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.*

*தென்னாட்டில் வளர்ச்சியடைந்த சைவம் சைவசித்தாந்தமாக பரிணமித்து மிளிர்கின்றது. சைவசித்தாந்தம் அகச்சமயங்கள் ஆறு, புறச்சமயங்கள் ஆறு, அகப்புறச்சமயங்கள் ஆறு, புறப்புறச்சமயங்கள் ஆறு, ஆகிய இருபத்தினான்கு சமயப்பிரிவுகளில் இருந்தும் வேறுபட்டு ஒரு உன்னதமான தலையாய சமயமாகத் திகழ்கின்றது ( ஞானகுமாரன்., நா, (1994), ப.14). இச்சமயங்கள் இருபத்திநான்கிலும் அகச்சமயங்களோடு கூடுதலான ஒற்றுமையையும், அகப்புறச்சமயங்களோடு ஓரளவு அகநிலை ஒற்றுமையையும், பேணுவதாக சைவசித்தாந்தம் திகழ்கின்றது.*

*சைவ சித்தாந்த நெறியானது மிகப்பழமை வாய்ந்தது என்பதனை ஜி.யு போப் பாதிரியார் திருவாசகத்தில் குறிப்பிடும் போது "சைவ சித்தாந்தம் திராவிட அறிவியல்நுட்பத்தின் உயர்நிலைப்படைப்பாக உள்ளது. இது மிக மிக விரிவானது நிரம்பிய செல்வாக்குடையது. முடிவு நிலை உண்மையோடு மிக மிக நுட்பமாக அணுகிநிற்கும் அகமுகத்தொடர்பு வாய்ந்தது. இந்திய மெய்ப்பொருள் ஞானங்கள் எல்லாவற்றிலும் இம்மரபொன்றே இம்மாண்புடையதாக உள்ளது. சிறப்பாக இது தென்னிந்திய தமிழ் மெய்ப் பொருள் ஞானப்பனுவல் மரபுடையது" (போப் பாதிரியார்., ஜி.யு.,) இதன்வாயிலாக சைவ சித்தாந்த மரபுக்கும் தென்னிந்திய திராவிடப் பண்பாட்டுத் தாக்கத்திற்கும் "தென்னாடுடைய சிவனே போற்றி" என்பதனைப் போல சைவப் பண்பாடு தமிழ் சார்புடையதாக அமைந்துள்ளது என்பதும் சைவ, சைவ சித்தாந்தமரபுக்கு ஒரு சிறப்பாக அமைகின்றது.*

### *1.4 சைவ விசிஷ்டாத்வைதம்*

*சைவவிசிஷ்டாத்வைதம் என்பது சைவத்தின் ஒருவகையான பிரிவாக எடுத்தாளப்பட்டுள்ளது. ஸ்ரீகண்டரால் பிரம்மசூத்திரத்திற்கு எழுதப்பட்ட பாசியத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட இச்சமயப் பிரிவானது பதி அல்லது பிரம்மம், பசு ஜீவன் அல்லது ஆத்மா, பாசம் அல்லது மூவகை மலம் என முப்பொருட்களை ஏற்றுக் கொள்கின்;றது. ஸ்ரீகண்டர் பரப்பிரம்மத்தை சிவன் எனவும் சிவனே அனைத்திலும் உயர்ந்தவர், நாராயணனைவிட்டும் உயர்ந்தவன்(தகாரே, வ.தா,(2021), ப270) எனும் கொள்கையை வலியுறுத்தினார். இராமானுஜரின் விசிஷ்டாத்வைதம் நாராயணனை பரமாத்மாவாக கொள்ள சைவவிசிஷ்டாத்வைதம் சிவனை மையமாக, முப்பொருட்களுக்கும் பிரதானம் அல்லது மூலம் எனக் கொண்டது. அத்தோடு பிரம்மத்தை நிர்விசேடமாக கொள்ளாமல் பல்வேறு மங்கல குணாம்சங்களைக் கொண்டவராக எடுத்துக்காட்டும். ஆன்மா அணுத்தன்மையானது, அறிவுடையது எனவும் என்றும் பதியில் இருந்து வேறுபட்டது, கர்மம், மாயை முதலிய மலங்களின் தொடர்பையுடையது. ஆத்மா தோன்றுவதில்லை அனாதியானது, எனவும் பாசம் அல்லது மும்மலங்களான ஆணவம், கன்மம் மாயை ஆகிய மூன்றும் இயல்பாகவே ஆன்மாவின் ஞானத்தை மறைப்பவை. ஆக முப்பொருள்களான பதி, பசு, பாசம், ஆகிய முப்பொருட்களையும். சைவசித்தாந்தத்தைப் போலவே சைவவிசிஷ்டாத்வைதம் எடுத்தாளுகின்றது.*

### *2. அகப்புறச்சமயங்கள்*

*சைவம் தன்னகத்தே பல பிரிவுகளைக் கொண்டமைந்து வளர்ச்சியடைந்த ஒரு சன்மார்க்க நெறியாகும். அது பல பிரிவுகளாக தோற்றம் பெறுவதற்கு கருத்தளவிலே ஏற்பட்ட வேறுபாடுகளே காரணமாக அமைந்தன. அந்தவகையில் சைவம் பற்றி பிரம்மசூத்திரத்தின் 2.37 எனும் பகுதிக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள், பல சைவசமயப்பிரிவுகள் இருந்தமையை எடுத்துரைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக சங்கரர் சிவனை மகேஷ்வரன் என்றும் அவரை வழிபட்ட மக்களை சைவசமயத்தவர் என்றும், வாகஸ்பதிமிஷ்ரா மகேஷ்வர வழிபாட்டை சைவம், பாசுபதம், காபாலீகம், காருண்ணிய சித்தாந்தம், என நான்கு பிரிவுகளாக எடுத்தாண்டுள்ளமையையும் குறிப்பிடலாம்;. பாஸ்கரர் இப்பிரிப்பில் காருண்ணிய சித்தாந்தம் எனும் பிரிவுக்கு பதிலாக கார்த்தசித்தாந்தம் எனும் பிரிவைக் குறிப்பிட்டுள்ளார்.*

அவரைத்தொடர்ந்து இராமானுஜரின் ஆசிரியரான ஜமுனாசாரியர் தனது ஆகமப்பிரமாணியம் எனும் நூலில் சைவம், பாசுபதம், காபாலீகம், காளாமுகம் ஆகிய நான்கு பிரிவுகளை எடுத்துக்காட்டியுள்ளார் (Lorenzen, D,R., 1972: 2). இதனைத் தொடர்ந்து மாதவாச்சாரியார் தனது சர்வதரிசன சங்கிரகத்தில் நகுலீச பாசுபதம், சைவதரிசனம், பிரத்திய பிஞ்ஞானம், இராசேஸ்வரம் ஆகிய நான்கு பிரிவுகளை எடுத்துக்காட்டுகிறார்;( ஞானகுமாரன், நா., 1994:11). ஆகவே சைவத்தில் காலம் தோறும் பல்வேறுபிரிவுகள் நிலவி வந்துள்ளன என்பதனை அறியமுடிகின்றது.

ஆகவே பிரம்மசூத்திர உரையாசிரியர்களின் அபிப்பிராயப்படி சைவமானது அடிப்படையில் சைவம், பாசுபதம், காளாமுகம், காபாலீகம் ஆகிய நான்கு பிரிவுகளாக நிலைபெற்றது ஏனைய பிரிவுகள் காலஓட்டத்தில் வழக்கொழிந்து போயின எனலாம். ஆயினும் சிவஞானமுனிவர் அகப்புறச் சமயங்கள் என பாசுபதம், காளாமுகம், காபாலீகம், வாமம், வைரவம், ஐக்கியவாதசைவம் என்கின்ற பிரிவுகளை அகப்புறச் சமயங்களாக குறிப்பிடுகின்றார். இப்பிரிவினருக்கிடையே அவர்கள் பின்பற்றுகின்ற நடைமுறைகளைக் கொண்டு பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கி.பி 6- கி.பி 12 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பலசைவக் குழுக்கள் தமக்கேயுரிய பல ஒழுக்கங்களோடு தோன்றி அகப்புறச்சமயங்கள் ஆறும் வளர்ச்சியடைந்தன. இவை சைவசித்தாந்தத்தில் இருந்து வேறுபடுவதற்கு அவை சைவசித்தாந்தத்தைப் போல சிவாகமங்களை முழுமையாக ஒப்புக் கொள்ளாமையும், முத்தி, சாதனம், ஞானம், என்ற கோட்பாடுகளுடன் உறுதி கொள்ளாமையிலும், வைதீகமென்ற சில செயல்களை ஆசாரமாகக் கடைப்பிடிக்காமையாலும்,அவை அகப்புறச்சமயங்கள் என வகைகுறிக்கப்பட்டன (கந்தையா மு., 1998 : 111).

### 2.1 பாசுபதம்

இறைவனைப் பசுபதி எனக் கருதி வழிபட்டதனால் இம்மதம் பாசுபதம் எனப் பெயர் பெற்றது. பாசுபதத்திற்கு மூலமாக சுவேதாஸ்வர உபநிடதமும், பாசுபதசூத்திரமும் அமைந்துள்ளன. பாசுபத சூத்திரத்தில் பதி பற்றிய கொள்கை எடுத்தாளப்பட்டுள்ளது (தகாரே வ.கா.,2001:39). பசுபதியாகிய சிவனை வழிபடும் ஒரு சைவ சமயப் பிரிவாக தரிசிக்கப்டுகின்றது. பிற்கால சைவசித்தாந்தம் எடுத்துக்காட்டும் பதி பற்றிய கோட்பாட்டிற்கு பாசுபதக் கொள்கை அடிப்படை எனக் குறிப்பிடலாம். மேலும் பாசுபதம் எடுத்துக் கூறும் தத்துவங்களில் இறைவன் அவருக்கு வேறாய் ஆன்மாக்கள் உள்ளன அவை எண்ணில் அடங்காதவை, நித்தியமானவை, வியாபகமாகவும் உள்ளன. காரணப் பொருள் பலவாய் காரியப்பட்டு பல ஆன்மாக்களாக உள எனவும், கன்மம், மாயை ஆகிய இருமலங்களை ஏற்று ஆணவத்தை ஏற்றுக் கொள்ளாத சமயப்பிரிவாக பாசுபதம் உள்ளது (அருணைவடிவேலு முதலியார் சி.,1991:100).

பாசுபதம் லகுலீசரால் இரண்டாம் நூற்றாண்டில் மீழ்வடிவமைக்கப்பட்டதனால் லகுலீச பாசுபதம் எனவும் அழைக்கப்பட்டது. லகுலீசர் சிவனின் அவதாரமாக கருதப்பட்டார் (ீயை னு.யு.இ1928: 62). இவர்கள் சிவனை வழிபடுவதனோடு தமக்கு முந்திய பாசுபத யோகத்தையும்

*பயில்பவர்களாக கொள்ளப்பட்டனர். பாசுபதத்திற்கான அடிப்படை வேதங்களில் உண்டு எடுத்துக்காட்டாக லகுலீச பாசுபதர்களால் ஓதப்படுகின்ற ஐந்து மந்திரங்களும் தைத்திரிய ஆரண்யத்தில் உள்ளது என்பதனைப் பாண்டே எடுத்துக்காட்டுவார் (ாீயனெநல மு.ஊ.இ 1986: 3). பாசுபதச் சடங்கைப் பற்றிய குறிப்பு ஆதர்சிவர உபநிடதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பிரகாரம். அனைத்தும் சாம்பலாகவே கொள்ளப்படும் எனும் சுலோகத்தைக் கூறி அச்சாம்பலை உடலிலே பூசவேண்டும். என்ற கருத்தை வலியுறுத்துவது பாசுபதசமயச்சாரம் என்பதனை எடுத்துக்காட்டுவார் ( மகாதேவன் ரீ. எம்.பி.,2006: 58).*

*பாஞ்சராத்திர மரபோடு தொடர்புபட்டவர்களாக பாசுபதர் காணப்படுகின்றனர். ஐந்துவிதமான தத்துவங்களை ஒப்புக் கொள்கின்றனர் அவை முறையே காரியம் (மகத்), காரணம் (ஈஸ்வரன்), யோகம்(தியானம்), விதி (விபூதியணிதல்), துக்காந்த (விடுதலை), இவை ஐந்தும் பாசுபத சைவர்களுக்கு அடிப்படையானவை. இவற்றில் பாசுபதர் கடவுளாக சிவனை(காரணர்) எனவும், சைவசித்தாந்திகள் எவ்வாறு முப்பொருள் தத்துவத்தையும் பன்மைவாத நோக்கில் எடுத்தாண்டுள்ளார்களோ அதேபோல பாசுபதர்கள் பன்மைவாத அடிப்படையிலான கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.*

*பாசுபதர்கள் நியாய, வைசேசிகர்களைப் போல ஈஸ்வரனை காரணராக ஏற்று நிற்கும் அதேவேளை முக்தி நிலையென்பது வேதனையில் இருந்து ஓய்ந்திருத்தல் என்பதனையும் ஒப்புக் கொள்கின்றனர். அத்தோடு சாயுச்சிய முக்தியை வலியுறுத்தினாலும் சிவத்துடன் ஆன்மா ஒரு தொடர்புபட்ட நிலையிலே இருக்குமே அல்லாது சிவத்துடன் கலப்பதில்லை ((*Pathak V.S.,*1980:17) இருமைவாதம், இருமைவாதம் அல்லாத (துவைதாத்வைதம்) கருத்தையே எடுத்துக்காட்டுகின்றது .அதன்பிரகாரம் காரியம், வித்தியா காலம், பசு என்பன பதியில் இருந்து தோன்றுகின்றன. கடவுளே தோற்றுவிப்பவரும் அவற்றில் இருந்து மேலானவருமாவார் காலம், பசு,வித்தை ஆகி மூன்றும் அவரின் சக்தியிலே இருந்து தோன்றி அனைத்து உயிர்களிலும் உறைகின்றர் என்பது பாசுபதசமயத்தின் கொள்கையாகும் ((*Pandey K.C., *1986 :9).*

*பாசுபதசூத்திரத்தில் குறிப்பிட்டது போல பாசுபதம் இருமைவாதத்தை எடுத்துக்காட்டாது சிவனுக்கே முக்கியத்துவம் கொடுப்பதனால் அது ஒருமைவாத சைவமாகவும் கொள்ளப்படத் தக்கது எனலாம். அத்தோடு பாசுபதம் கூறும் முத்தி நிலை என்பது ஆகம வழியில் தீட்சையினைப் பெற்று அதனூடாக ஈஸ்வரஞானத்தைப் பெறுவதனால் ஆன்மா ஈஸ்வரனது ஆற்றலைப் பெறும். அவனது செயல்களை ஆன்மா செய்து கொண்டிருத்தல் முத்தி நிலை எனக் கொண்டதனால் பாசுபதம் கூறும் முத்தி நிலை சைவசித்தாந்தத்தில் இருந்து வேறுபடுகின்றது. பாசுபத முத்தி பற்றிய கருத்து சிவசமவாதத்திற்கு ஒத்ததாக வருகின்றது எனலாம்.*

*பாசுபதம் எடுத்துக்காட்டும் சிவனைப்பற்றி ஈசான சிவகுரு பத்ததி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது சிவன் சுடலைச்சாம்பலை உடலில் பூசியவனாகவும், சடாமுடி தரித்தவனான சிவனை பாசுபதர்கள் வழிபட்டதனால் பாசுபத சிவவழிபாடு தோற்றம் பெற்றது என்றும் மேலும் பாசுபதம் எடுத்துக்காட்டும் சிவன் தன்னை சர்வா, பாவ, ஈசான, ருத்திர, உக்கிர, பீம, பசுபதி,*

*மகாதேவ, ஆகிய எட்டு வகையான வடிவங்களைத் தரிப்பதாக சதபத, சங்காயன பிராமணம், என்பனவற்றில் எடுத்துக்காட்டப்படுகின்றது என்பதனை பதாக் குறிப்பிட்டுள்ளதும் (*(Pathak V.S., *1980: 18) பிற்கால சைவசித்தாந்த மரபில் சிவன் எண்குணத்தான் என எடுத்தாளப்படுவதற்கு ஒப்பானதாக கொள்ளத்தக்கது.*

***2.2 காளாமுகம்***

*காபால அல்லது காளாமுகம் என அழைக்கப்படும் மற்றுமொரு சைவசயப்பிரிவு. சைவ சமயத்தத்துவங்களை வேறு ஒரு பரிமாணத்தில் எடுத்துக்காட்டுகின்றது. இராமானுஜர் காபாலிக மதத்தைப்பற்றி பிரம்மசூத்திரபாசிய உரையில் குறிப்பிடும் பொழுது கபாலிகர்கள் ஆறு முத்திரைகளை அணிந்திருப்பது இன்றியமையாதது என்றார். அவையாவன முறையே கழுத்தில் பட்டி, அணிகலன், காது அணி, பிறைபோன்ற அணிகலன், சாம்பல், பூநூல் அணிதல் போன்ற அடையாளங்களை கொண்டவர்களாக காணப்படுவர். காபாலிகர் சிவனை வழிபட்டாலும் இவர்கள் மிகவும் கடுமையான தவத்தினைப் (மகாவிரதம்) புரிபவர்களாக காணப்படுவதனால் தங்களை ஒறுத்து தலையோட்டிலாலான மாலையணிந்து, தலையோட்டிலே உணவருந்துபவர்களாகவும், உடலை எரித்த சாம்பலை எடுத்து உடல் எங்கும் பூசிக் கொண்டவர்களாகவும் காணப்படுபவர் என இராமானுஜர் குறிப்பிடுவதனை பண்டாக்கார் எடுத்துக்காட்டுவது (*(Bandarkar R.G.,*1965: 127) கபாலிகர் பற்றிய தெளிவைத் தருகின்றது. வைரவ பிரிவினரைப் போல சிவனுடைய அகோரவடிவத்தை வழிபடுபவர்களாகவும், மண்டையோட்டை மாலையாக அணிபவர்களாகவும், உடலில் நீறு அணிபவர்களாகவும் காணப்படுகின்றனர். காபாலிகர்களுக்கும் பாசுபதர்களுக்குமிடையே பல ஒருமைப்பாடுகள் காணப்படுகின்றன. ஆனாலும் காபாலிகர்களுக்கும் காளாமுகத்தினருக்குமிடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுவதில்லை. இராமானுஜர் குறிப்பிடும் பொழுது இவர்கள் மகாவிரதங்களை பின்பற்றுபவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார் (*Pai D.A., *1928: 64). என்பது சைவசமயத்தின் ஒரு வகையான தன்ஒறுப்பு அல்லது துறவிகளாக விளங்கிய பிரிவாக இவர்களைக் கொள்ளவும் இட்டுச் செல்கின்றது. அதேவேளை இவ்வுலக ஆசாபாசங்களை அனுபவித்து மகிழ்ந்தவர்களாகவும் விளங்கினர்.*

***2.3. மாவிரதம்***

*மாவிரத நெறியைப் பின்பற்றுபவர்கள் பாசுபத மதத்தை ஒத்த பல நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர். இவர்கள் தொடர்ச்சியாக எலும்பு மாலை அணிந்து இருப்பவர்கள். அவ்வாறான ஆசாரங்களே முத்திக்கு வழிவகுக்கும் என நம்புகின்றனர்( அருணைவடிவேல் முதலியார்., சி, 1991:170).*

*ஆன்ம விடுதலைக்கு தீட்சை பெற்று எலும்புமாலை அணிவது போன்ற சரியை நெறியைப் பின்பற்றுவதனால் முத்தராவார்கள். முத்தருக்கு சிவனோடு சமமாக எல்லாக் குணங்களும் உருவாகும் என்று ஏற்பர்.*

### *2.4 காபாலம் அல்லது காபாலீகம்*

*சிவனை வழிபடுகின்ற மற்றுமொரு பிரிவினராக காபாலீகர் விளங்குகின்றனர். காபாலீகர் மகாவிரதங்களைப் பின்பற்றுகின்ற சைவசாசனம், சோமசித்தாந்தத்தோடு தொடர்புபட்ட ஒரு வகையினராக கொள்ளப்படுவர். காபாலீகம் பற்றிய கருத்தியலானது மைத்திரேய உபநிடதத்தில் இடம் பெறுகின்றது என்பார் பத்தாக் ( Pathak V.S., 1980:19). மாலதிமாதவ, கார்ப்பூர மஞ்சரி, மாதவிலாச போன்ற தாந்திரிகங்களிலும், இராமானுஜரின் ஸ்ரீபாசியத்திலும் கபாலம் ஏந்தியவர்களாக காபாலிகரைச் சித்தரிக்கப்படுகின்றார்கள். சிவனை அகோரவடிவிலான மகாபைரவராக கருதி கபாலீகர் வழிபடுகின்றனர். மகாவிரதங்களை அனுஷ்டித்து தம்மைத் தாமே ஒறுத்துக் கொள்ளுகின்ற ஒரு பிரிவினராக இவர்கள் விளங்குவர். எப்பொழுதும் பச்சைக் கொடியை கையில் வைத்திருக்க வேண்டும் அத்தோடு மனிதனின் மண்டை ஓட்டில் இரந்து உண்ண வேண்டும் இவையே முத்திக்கு வழி என்று நம்புவர். முத்தி நெறியில் நிற்பவர்கள் சிவனால் ஆவேசிக்கப்படுவதனால் சிவனோடு சமமாய் விளங்குவர். அவ்வாறு விளங்குவதே முத்தி என்பர். முத்திநிலையில் ஆன்மாவும் சிவமும் சமம் என்பதே காபாலிகரினது நிலைப்பாடு இதனை சிவசம வாதமுத்தி நிலைக்கு ஒத்ததாகக் கொள்ள முடியும். இது சைவசித்தாந்த முத்தி நிலைக்கு விரோதமானதாகும்.*

### *2.5 வாமம்*

*வாமம் சக்தியை முதன்மைப்படுத்துகின்ற சமய நெறியாகும். சக்தி சைவபாரம்பரியத்தில் சிவத்திற்கு படைப்புக்கு உதவுகின்ற சக்திவடிவமாக கொள்ளப்பட வாமம் சக்தியே சடமாகவும் சித்தாகவும் உள்ள அனைத்தும் மூலம். சக்தியின் பரிணாமத்தாலே அவை பரிணமிக்கின்றன. வாம நூலில் விதித்த படி ஒழுகி சக்தியில் இலயித்தலே முத்தி என வாமம் எடுத்துக் காட்டுகின்றது.*

### *2.6 வைரவம்*

*வாமத்தை ஒத்தது ஆனால் சிறு சிறு ஆசார வேறுபாடுகள் உள்ளது. பைரவக் கடவுளே பரம் பொருள் எனக் கொள்ளும். வைரவ ஆகமத்தின் படி ஒழுகி வைரவபாதத்தில் சேர்வதே முத்தி எனப்படும்.*

### *2.7 ஐக்கியவாதசைவம்*

*ஐக்கியவாத சைவத்தின் தனித்துவம் இது ஏனைய சமயப்பிரிவுகள் உயிர்களைப் பந்திக்கும் மலங்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களாகும் என எடுத்துக்காட்ட அதனை நிராகரித்து. குறிப்பாக ஆணவத்தை ஏற்காது கன்மம் மாயை ஆகிய இரண்டையும் உயிர்களின் பந்தத்திற்கு காரணம் என்பதனை வலியுறுத்தும். கடவுள் அருளால் கன்ம, மாயைகள் நீங்கி சிவத்தோடு ஆன்மா நீரும் நீரும் சேர்ந்தாற் போல் ஐக்கியமாய் ஒன்றாகிவிடும் நிலை முத்தி எனப்படும். ஆன்மா சிவத்தோடு ஐக்கியமாவதனால் ஐக்கியவாத சைவம் எனப்படும். இது ஏனைய அகப்புறச்சமயங்களோடு ஒத்துவந்தாலும் ஆணவத்தை ஏற்றுக் கொள்ளாமையாலும், முத்தி நிலை பற்றிய நோக்கில் சைவசித்தாந்தத்திற்கு விரோதமாகின்றது.*

*அகப்புறச்சமயங்கள் ஈஸ்வரனின் ஆற்றல் உயிரிற்பாய்தல் என்ற கருத்தை பொதுவாக ஏற்றுக் கொள்கின்றன. இச்சமயங்கள் ஆறும் சிவனின் ஒவ்வொரு கோலத்தையும் ஏற்றுக் கொள்கின்றன. எடுத்துக்காட்டாக சிவனின் திருவெண்ணீற்றுக் கோலத்தை பாசுபதமும், ஆனைஉரி போத்திய கோலத்தை காளாமுகமும், அக்கினியும் உபநீதமும் தாங்கிய கோலத்தை வாமமும், என்புமாலை தரித்த கோலத்தை மகாவிரதமும், மண்டையோட்டு மாலை தரித்த கோலத்தை காபாலீகமும், ஏற்றுக் கொள்ளும். ஆன்மாவின் துன்ப நீக்கமடையும் பொழுது ஈஸ்வரனது கிரியை, ஞான, ஆற்றல் ஆன்மாவைச் சேர்ந்து விடுவதனால் அந்நிலையில் ஸ்வரன் தனது பஞ்சகிருத்தியப் பொறுப்பை ஆன்மாக்களிடம் விட்டுவிட்டு ஓய்வு நிலை பெறுவார். எனச் இச்சமயப்பிரிவுகள் கூறும்.*

### *3. சைவசித்தாந்தமும் அகச்சமயங்களும்*

*சைவ சித்தாந்தம் அகச்சமயங்களோடு தொடர்புபட்டுக் காணப்படுவதனால் அதனை அவற்றோடு ஒப்புநோக்குவது இங்கு பொருத்தமாக இருக்கும் என்பதனால் அவ்வகச்சமயங்கள் பற்றி நோக்குவோம்.*

### *3.1 பாடாணவாத சைவம்*

*பாடாணவாதம் இவ்வுலக துன்பங்களில் இருந்து விடுபடுவதற்கு முக்தியை எதிர்மறையான ஒரு வேதனையற்ற நிலையாகக் கொள்ளும். இந்நிலையில் ஆன்மா கல்லைப் போல உணர்வற்று இருக்கும். ஏனெனில் மலம் அதனைச் சூழ்ந்திருக்கும். பாடாணவாதம் கூறும் ஆன்மாவின் அறிவற்ற நிலையாகிய முக்தி நிலை சைவசித்தாந்திகள் கூறும் கேவலாத்வைத நிலைக்கு ஒப்பானது.*

*உயிரின் குணமே ஆணவமலம். முத்தியிலும் மலம் நீங்காது ஆதலால் ஆன்மாவின் அறிவு சிவத்தோடு கூடாமல் மலத்தில் அடங்கிக் கல்போல் கிடக்கும். உயிரின் குணம் உயிருள்ளவரை கெடாதவாறு போல இயல்பாகவே உயிருடன் கூடியிருக்கும் ஆணவமலம் உயிரின் வேறாய் நீக்கப்பட மாட்டாது.*

*பாடானவாதத்தை வலியுறுத்துபவர்கள் முக்தி என்பது உலகில் துன்பங்களால் பீடிக்கப்பட்டிருப்பதற்கு எதிர்மறையான ஒரு துன்பம் இல்லாத இருப்பு நிலையாக கருதுகின்றனர். ஆன்மா ஒரு கல்லைப் போன்று கிடக்கும். ஏனெனில் மலம் பயனற்றதாக ஆக்கப்பட்டாலும் அது ஆன்மாவை மூடுகின்றது. பாடான வாதிகளின் இந்த நிலைப்பாட்டை சைவசித்தாந்திகள் தமது கேவல நிலைக்கு ஒப்பிடுவர். பேதவாதம் மலம் நீங்குதலே முத்தியன்றிச் சிவபெருமான் திருவடியை அடையவேண்டுவதல்ல என்பதே இவர்களது நிலைப்பாடு.*

### *3.2 பேதவாத சைவம்*

*பேதவாதம் கடவுளுக்கும் ஆன்மாவிற்கும் இடையே முத்தி நிலையிலும் வேறுபாடு அல்லது பேதம் உண்டு எனக் கூறும். முக்தி நிலையிலும் ஆன்மாவும் பிரம்மமும் ஒன்றாகச் சேராது. என்பதாகும். பேதவாதம் கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் இடையே பேதம் அல்லது வேறுபாடு*

*இருப்பதனால் முக்தியிலும் அவை தனித்தனியாக இருக்கின்றன. என்று குறிப்பிடுவர். பேதவாதிகளின் இந்தக் கருத்தை சைவ சித்தாந்திகள் மறுத்து முக்தியில் உள்ள ஆன்மா சிவனால் பாதிக்கப்படாவிட்டால் அது தனது ஆற்றலை உணராது ஆகவே அது சிவத்தோடு தொடர்புபட்டு இருக்கும் என எடுத்துக்காட்டுவர்.*

*பேதவாத சைவர் முப்பொருளில் ஆணவம், கன்மம், மாயை ஆகியவை ஆன்மாவை அநாதி தொட்டே செம்பில் களிம்பு போல ஒட்டியுள்ளன. அந்தவகையில் ஆன்மாக்கள் சுகதுக்கங்களை அனுபவிக்கும் அவ்வாறு அனுபவித்து பக்குவம் வரும் பொழுது ஆன்மா இறைவனின் திருவருளால் மலங்கள் நீங்கப் பெற்று பெறுவானும் பேறுமாயிருக்கும். சைவசித்தாந்த முத்தி நிலையில் காட்சி, காட்சிப் பொருள், காண்பவன் ஆகிய மூன்றும் வேறு அன்று அதேபோல ஆன்மா, அறிவு, பாசம், சிவன் ஆகியன முத்திநிலையில் ஒன்றாக இருந்தாலும் அவை வேறுவேறு. அந்நிலையில் ஆன்மா சிவம் ஒன்றையே அறிந்து நிற்கும்.*

***3.3 சிவசமவாத சைவம்***

*வேதம், ஆகமம் ஏனைய நூல்கள் எல்லாமே பதி, பசு,பாசம், ஆகிய முப்பொருள் பற்றிக் கூறும். சிவசமவாதத்தின் படி கடவுளும் ஆன்மாவும் சமம் எனக் கருதுதல். அத்தோடு ஆன்மா கடவுள் செய்கின்ற செயல்களையெல்லாம் செய்யக்கூடியது எனவும் ஒப்புக் கொள்ளுகின்றது. ஆனால் சித்தாந்தம் இரு சித்துப் பொருட்களும் வேறு வேறானவை எனக் கொள்ளும். கடவுள் அருள் உடையவர். ஆன்மா அவரது அருளைப் பெறுபவர். ஆன்மா மாற்றத்திற்கு ஊடாகவும் அனுபவத்திற்கு ஊடாகவும் அறிந்து கொள்வது. ஆனால் கடவுள் அவ்வாறன்றி தாமாகவே அனைத்தையும் அறிபவர். கடவுளுக்கும் ஆன்மாவிற்கும் இடையேயான தொடர்பு சூரியனுக்கும் கண்ணுக்கும் இடையேயான தொடர்புக்கு சமமாகும். சூரியன் சுயமாகப் பிரகாசிப்பது அப்பிரகாசத்தால் கண் பார்க்கின்றது. இவ்வாறு சைவசித்தாந்தம் கடவுளுக்கும் ஆன்மாவிற்கும் இடையேயான தொடர்பையும் தனித்துவத்தையும் விளக்க, சிவசமவாதம் அதற்கு நேர்மறையாக இறைவனும் ஆன்மாவும் சமம் எனக் கூறும்.*

*சிவசமவாதம் கடவுளையும் ஆன்மவையும் சமம் அல்லது சமமாக நம்புவதால் கடவுள் என்ன செய்தாலும் அதனை ஆன்மாவால் செய்ய முடியும் என்று வலியுறுத்துவது சிவசமவாதமாகும். சைவசித்தாந்திகளோ கடவுள், ஆன்மா என்ற இரண்டிற்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக்காட்டி, கடவுள் கிருபை அதன் பயனாளி ஆன்மா அது மாற்றங்களுக்கு ஆட்படுவதன் மூலம் ஆன்மா கற்றுக் கொள்கின்றது. இறைவன் தன்னை அறிந்த புத்திசாலி கடவுளும் ஆன்மாவும்; சூரியனும் கண்ணையும் போன்றன சூரியன் தானாக ஒளிர்கின்றது, கண்ணால் சூரியனின் உதவியால் பார்க்க முடிகின்றது. என எடுத்துக்காட்டும். சிவசமவாதம் முத்திபெற்ற உயிர் சிவனோடு சமமானதாதலின் முத்தியில் உயிர் அடிமையாதலில்லை. ஐந்தொழில் செய்யும். ஆணவம் நீங்கியவிடத்து ஆன்ம ஞானம் சிவஞானத்தோடு ஒப்பதன்றிப் பசுஞானம் எனப்படாமையால் முதல்வன் அந்த ஆன்மஞானத்தால் அறியப்படுபவன் என்பது பொருந்தும். மாறாக இறைவனின் அருளால் அறியப்படுவன் என்பது பொருந்தாது. சைவசித்தாந்திகள் உயிர் அறிவிக்க அறியும் பொருள் என்று கூற சிவசமவாதமோ ஆன்மாக்கள் தாமாகவே அறியும்*

*தன்மையுடையவை எனக்கூறும். பசுஞானம் நீங்கியவிடத்து ஆன்மா பதிஞானத்தோடு ஒப்பானதாகும். பதிஞானத்தால் அன்றி ஆன்மாவையும், பதியையும் அறியமுடியாது எனும் வாதத்தை சிவசமவாதம் ஏற்றுக் கொள்வதில்லை.*

*சிவசமவாதம் பதிஞானம், பசுஞானம், பாசஞானம் எனும் மூன்றும் அனாதியே உளது எனக்கூறும். பாசஞானத்தை விளக்கப் பசுஞானம் அவற்றைப் புசித்து பசுஞானம் பாசஞானம் ஆகிய இரண்டும் நீங்கியவுடன் பதிஞானம் ஆன்மாவை எடுத்துக் கொள்ளும். அதன்வழி ஆன்மா பதிப்பொருளைத்தியானித்து அதற்குச் சாமியமாயபின் அப்பதி செய்யும் பஞ்சகிருத்தியம் செய்யும் (கிருஷ்ணராஜா, சோ, 2005:62). சிவசமவாதிகள் பதியும் ஆன்மாவும் ஒன்று என்று கொள்வதனால் அத்வைத நிலை ஏற்படுகின்றது. பதியும் ஆன்மாவும் சமம் என்று கூறுவதற்கும் மேலாக என்றும் கூறுவர் சிவசமவாதிகள். சிவனும் ஆன்மாவும் ஒன்றாகிய நிலையென்பது பதி சொரூபசிவனுடன் அல்லாது தடத்தசிவனுடன் கூடிநிற்றலையே சுட்டுகின்றது என்றவாதமும் கவனிக்கத்தக்கது. ஞானப்பிரகாசர் தன்னைச்சிவசமவாதி எனக்குறிப்பிடும் அதேவேளை சுத்தாத்வைதசைவசித்தாந்தியன் எனக்குறிப்பிடுகின்றார் (Devesenapathi. V.A.,1974:23).*

***3.4 சிவசங்கிராந்த வாதசைவம்***

*சிவசங்கிராந்தவாதசைவம் இச்சமயப்பிரிவினர் சடக்காரணங்கள் உலகத்தை அறியப் பயன்படுகின்றது. சிவகரணங்களால் கடவுளை அறியலாம் எனக்கூறும். ஆனால் சைவசித்தாந்தமோ கடவுள் அனைத்துவகையான கரணங்களுக்கும் அப்பாற்பட்டவர் எனக்கூறி கரணங்களால் கடவுளை அறிய முயடியாது எனக்கூறும்.*

*சிவசங்கிராந்தவாதசைவர் முத்தியில் உயிர் சிவத்துடன் ஒன்றாய்ப் போதலேயன்றி அடிமையாவதில்லை. விளக்கின் சக்தியில் கண்ணொளி பொருளை அறிவது போல பெத்த நிலையில் ஆன்மசக்தியில் கரணங்கள் விடயங்களை அறியும் அதுபோல முத்திநிலையிலும் அக்கரணமே சிவகரணமாய் ஆன்ம சக்தியில் நின்று சிவத்தைஅறியும். கண்ணாடியின் சக்தியில் அதன் நிழலுக்குப் பிரகாசம் உண்டாவது போல ஆன்ம சக்தியில் சடமாகிய கரணத்திற்கு அறிவு உண்டாகும். அது பாசஞானம் என வழங்குவதால் அப்பாசஞானத்தை அறிவுடையதன்று எனக் கொள்வது பொருந்தாது.*

*சிவசங்கிராந்தவாதம் ஆன்மாவின் சந்நிதியிலே காந்தபசாசம் போல உடல் இயங்குமிடத்து அதன் கண்ணின்று கருவிகளே விடயங்களை அனுபவிக்கும். மலம் நீங்கியவிடத்து, கண்ணாடியில் முகவொளிதோன்றுமாறு போல முதல்வனது திருவருள் ஆன்மாவிடத்துச் சங்கிரமித்துத் தோன்றும். அப்பொழுது உப்பளத்திலிட்டவையெல்லாம் உப்பாக மாறுவது போல ஆன்மா சிவமேயாய் அவ்வான்மாவின் சந்நிதியில் அறிவனவாகிய பசுகரணங்களுஞ் சிவ கரணங்களாய் மாறிச் சிவத்தை அறியும் என்பதாகும்.*

.

### *3.5 ஈசுவர அவிகார வாத சைவம்*

*ஆன்மாவை காப்பாற்றுவதில் கடவுளின் பங்கு பற்றியதே இந்தக் கோட்பாட்டிற்கும் சைவசித்தாந்தத்திற்கும் இடையேயுள்ள சர்ச்சைக்குரிய புள்ளியாக அமைகின்றது. ஈசுவர அவிகாரவாதசைவம் விகாரம் அல்லது மாற்றத்திற்கு அப்பாற்பட்ட சிவன் செயலற்றவராக இருக்கின்றார். இறைவனின் மகிமையைக் கண்டு ஆத்மா அவரை நோக்கிப் பயனிக்கின்றது. அதனை சோர்வடைந்த மனிதன் எவ்வாறு குளிர்ந்த நிழலை நோக்கி நகர்கின்றானோ அதே போல ஆன்மா இறையை நோக்கி நகர்கின்றது என எடுத்துக்காட்டுவார்.*

*ஈசுவர அவிகாரவாதசைவமானது துளையுடைய குடத்திலேற்றிய தீபம் போல நவதுவாரமுடைய உடம்பில் ஆன்மா அறிவாய் நிற்கும். நிற்பினும் அவ்வப் பொறிகளான அவ்வவற்றைக் கூடி அறியும். அது மலபரிபாகமுஞ் சந்நிதிபாதமுஞ் சேர்ந்தவிடத்து முதல்வனது திருவருளால் ஞானத்தைப் பெற்று 'வெய்யிலிலே திரிந்தானொருவன் மரநிழல் கண்டு ஆறுவதுபோல' அம்முதல்வனது திருவடிநிழலை அடையும். இங்ஙனம் கூடியவிடத்து உயிர் முதல்வனது உபகாரத்தை அவாவது என்பதாகும்.*

### *3.6. சிவாத்துவித சைவம்*

*சிவாத்துவிதவாதிகள் பசு பாசங்கள் தனித்த பொருளன்று; சிற்சக்தியின் பரிணாமமே பதி பசு பாசங்களுக்குத் தம்முள் வேற்றுமை, குணங்குறிகட்குளதாகிய வேற்றுமைபோல உட்பேதமேயன்றி புறப்பேதம் அன்று. உடலில் கட்டப்பட்ட உயிர் சிவத்தின் வேறாகாமையால் உயிரின் பொருட்டு உண்டாகும் தோற்றக்கேடுகள் சிவத்திற்கு ஏற்படும் எனக் கொள்வர். முதல்வனோடு கூடிப்பெற்ற உயிர் அம்முதல்வனோடு ஒன்றாகுமாதலால் முத்திநிலையில் அவன் அருளால் உயிர் அறியும் என்பதும் முதல்வன் அறியப்படுவான் என்பதும் தவறு.*

*உயிர்க்காக இறைவன் அவ்வுயிர்களோடு பொருந்தி உலகத்தை அறிவான் ஆதலால், இறைவன் முன் உலகம் சூனியம் என்றால் பொருந்தாது. முற்றுணர்வுடைய சிவத்திற்குப் பிரபஞ்சத்தை சுட்டி அறிவதாகிய சுட்டுணர்வு உண்டு ஆதலால் இறைவனால் பிரபஞ்சம் சுட்டி அறியப்படும்.*

*சிவாத்துவித சைவர்கள் ஒருமைவாத கடவுள் கோட்பாட்டை கொண்டவர்கள். சிவன் தானாகவே உலகாக மாற்றமடைதல் எனும் கருத்தை முன்வைக்கின்றார்கள். சிவனே உலகாக மாற்றமடைதல். என்பது சங்கரரின் அத்வைதக் கருத்தை ஒத்ததாக அமைகின்றது. அத்தோடு விசிட்டாத்வைதம் கூறும் உலகு கடவுளின் பகுதி எனும் கருத்தோடு ஒத்துவருகின்றது.*

*சித்தாந்தம் சிவாத்துவிதக் கோட்பாட்டை பின்வருமாறு ஆராய்கின்றது. காரணகாரியக் கருத்து படைப்பின் நோக்கம் மற்றும் உற்பத்தி செய்யும் அசித் காரணங்கள் ஜடப்பொருட்கள், உள்ளுணர்வு திறன் என இருப்பதனாலும். இம் மூன்று காரணங்களில் சிவனே உலகிற்குக் காரணம் என்றால் மற்ற இரண்டு வகைக் காரணங்களும் இல்லாத நிலையி;ல் அவனால் எந்தவிதமான*

*பலனையும் ஏற்படுத்த முடியாது. கடவுள் மாத்திரம் தான் இருக்கின்றார் என்றால் படைப்பை எவ்வாறு ஏற்படுத்துவது என சித்தாந்திகள் ஆட்சேவிப்பர்.*

*சிவப்பிரகாசம், சிவாத்துவிதசைவம் பற்றிக் குறிப்பிடும் பொழுது பதி, பசு, பாசங்களின் இயல்பும் தத்துவங்களுக்கு தோற்ற ஒடுக்கங்களும் அஞ்சவத்தைப்படும் வேறுபாடுகளும், அனைத்துஞ் சித்தாந்த சைவரோடு ஒப்பாகக் கொண்டு பசு, பாசங்கள் பதிவியாபகத்தில் வியாப்பியமாய் நிற்பனவன்றி தனித்தபொருள்கள் அல்ல. சிற்சக்தியின் பரிணாமமே பதி, பசு, பாசங்களுக்கு தம்முள் வேற்றுமை குணங்குறிகட்குளதாகிய வேற்றுமை போல உட்பேதமேயன்றி புறப்பேதமன்று. எடுத்துக்காட்டாக மரத்தின் வியாப்பியமான கொப்பு, கிளை எல்லாம் மரமேயாவது போல சதசத்தும் அசத்துமாகிய அனைத்தும் சத்தெனவேபடும் ஆகையால் பதித்தன்மையின் வேறாய் பசுவிற்கு அறிவுத்தன்மையின்று சத்தாகிய பதிப்பொருளே ஆன்மாவின் இடமாக நின்று அறியும் என்றவாறு எனக் குறிப்பிடும். மேலும் ஆன்மா சர்வஞாதிகுணங்களைச் சிவோகம்பாவனையினால் அடைந்து ஒளிமார்க்கவாயிலாக பிரமலோகத்தை அடைந்து சிவசாரூப்பியம் உற்று சிவானந்தத்தோடு சமஸ்த்த போகங்களையும் துய்த்து புனராவர்த்தியின்றி இருப்பவர் என்று கூறுவர் (கிருஷ்ணராஜா.,சோ., 2005: 62).*

*சிவாத்துவிதசைவத்திற்கும் சித்தாந்த சைவத்திற்குமிடையே பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருட்களுக்கிடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவ்வாறு பதி பசு பாசத் திற்கிடையே காணப்படும் தொடர்பு அதவாவது பதியின் விசேடணம் பசு பாசங்கள் ஆகும் எனவும், பதியை அவ் விசேடணங்களையுடைய விசேடியம் எனக்கூறுமளவிற்கு அந்த தொடர்பு காணப்படுகின்றது. சிவாத்வைதத்திற்கும் விசிட்டாத்வைதத்திற்கும் இடையே ஈஸ்வரனின் விசேடணங்களாக ஆன்மாக்களும் உலகும் உள்ளன எனும் விசேட அத்வைதத்திற்கு ஒப்பானதாகும் எனலாம். ஸ்ரீகண்டரினது சிவாத்வைதத்திற்கும் சைவசித்தாந்தத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு உண்டு அதாவது ஸ்ரீகண்டரோ அதியுயர் பிரம்மத்தை சைவசித்தாந்தம் எடுத்தாளும் சிவனுக்கு ஒப்பானது என்பார். அத்தோடு கடவுளுக்கும் ஆன்மாவிற்கும் இடையேயான தொடர்பு உடலுக்கும் உயிருக்கும் இடையேயான தொடர்பு என விளக்கி நிற்பார். இக்கருத்தியலானது சைவசித்தாந்தக் கருத்தியலோடு சிறிது வேறுபடும் அதேவேளை ஒன்றுபடுகின்றது என நல்லசுவாமிப்பிள்ளை எடுத்துக்காட்டியுள்ளார் (Nallaswamipillai J.M., 1911:266)*

***முடிவுரை:***

*சிவ சம்பந்தமுடைய சைவம் சிந்துவெளியில் தொடங்கி சைவசித்தாந்த தத்துவமாக வளர்ச்சியடைந்த ஒரு இந்துசமயப் பிரிவாகும். அதற்குள் பல பிரிவுகள் தோற்றம் பெற்று சைவச் சிந்தனையையும் தத்துவத்தையும் வளர்த்துச் சென்றன. சைவம் பிராந்திய அடிப்படையிலும் காஷ்மீர சைவம், வீரசைவம், சைவ விஷிட்டாத்வைதம், சைவசித்தாந்தம் எனவும், அகச்சமயங்கள் அகப்புறச் சமயங்களோடும் ஒத்தும் ஒவ்வாமலும் சைவ தத்துவங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. இவ்வளர்ச்சியானது சிவனை முழுமுதலாகக் கொண்ட சைவர்களுக்கிடையே கருத்துநிலை வேறுபட்டாலும் சைவசித்தாந்தம் எடுத்துக்காட்டும் முப்பொருள் தத்துவங்களோடு பல*

இடங்களில் ஒத்துச் செல்கின்ற பிரிவுகளாகவே அகச்சமய மற்றும் அகப்புறச் சமயப்பிரிவுகள் அமைந்துள்ளன. ஆகவே சைவம் பல பிரிவுகளாக பிரிந்தாலும் அவை சைவத்தின் பல பரிணாமத்தையே எடுத்துக்காட்டி சைவத்தை வளப்படுத்தியுள்ளன என்பதே மறுக்கமுடியாத உண்மை எனக்கூறலாம்.

**உசாத்துணை நூல்கள்**


***English Books***

1. Bhandarkar, R. G. (1965). *Vaishnavism, saivism and minor religious systems.* Ideological Book House.
2. Chatterji, J. C. (1985). *Kashmir shaivism.* University of Mysore.
3. Devasenapathi, V. A. (1974). *Saiva siddhanta.* University of Madras.
4. Lorenzen, D. N. (1972). *The Kapalikas and Kalamukhas: Two lost Saivite sects.* Thomson Press.
5. Nallaswami Pillai, J. M. (1962). *Studies in Saiva Siddhanta* (Part 1). Dharmapuram Adhinam.
6. Narayana Ayyar, C. V. (1974). *Origin and early history of saivism in South India.* [Publisher not specified].
7. Pai, D. A. (1928). *Monograph on the religious sects in India among the Hindus.* Cecil.
8. Pandey, K. C. (1986). *An outline history of Saiva philosophy.* Motilal Banarsidass.
9. Pathak, V. S. (1960). *History of the Saiva cult in northern India.* Abhinav Prakashan.

**தமிழ் நூல்கள்**

1. அருணைவடிவேலு முதலியார்,சி., (1991), சிவஞான போத மாபாடியப் பொருள் நிலைவிளக்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2. மகாதேவன், ரி.எம்.பி.,(2006), இந்து சமயத் தத்துவம், குமரன் புத்தக இல்லம்.
3. ஞானகுமாரன். பேராசிரியர் நா,. (1994), சைவசித்தாந்த தெளிவு, செல்வம் வெளியீடு, யாழ்ப்பாணம்.
4. ஞானகுமாரன். பேராசிரியர் நா., (1994), சைவசித்தாந்த தெளிவு, செல்வம் வெளியீடு, யாழ்ப்பாணம்.
5. கந்தையா, மு., (1998), சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
6. திருவிளங்கம் மு., (1974), சிவப்பிரகாசம், யாழ் கூட்டுறவுத்தமிழ் நூற்பதிப்புக்கழகம்.